**திஹகொட பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூலை 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து திஹகொட பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 200,000 தொகைக்கான ஆயுள்வேதப் பொருட்கள் உதவியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா ,045,570 தொகைக்கான பெயரப்பலகைகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் மற்றும் தளபாடங்களும் பொருத்துக்களும் ஆகிய நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) கலபட சனசமூக நிலையம், கோமங்கொட மற்றும் கோட்டவத்த ஆகிய இரண்டு மயானங்கள் மற்றும் திஹகொட பஸ் தரிப்பிடத்திற்கு அண்மையிலுள்ள காணி ஆக சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்திரந்த ரூபா 192,915 தொகைக்கான தடுத்து வைத்தல் வைப்புத் தொகைக்கான சீராக்கல் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளை தீர்க்காமல் தொடர்ந்தும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(உ) கல்ஹேன்கொட மென்டோரய பாதையை ஒழுங்கு செய்வது தொடர்பாக செலுத்தியிருந்த ரூபா 242,500 இற்கான செலவினை கழிக்காமல் மதிப்பீட்டுத் தொகையாகிய ரூபா 1,000,000 இற்கான தொகையை நிர்மாண வெலை கடன்பட்டோரின் கீழ் காட்டியிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 9,017,348 தொகைக்கான 05 கட்டிடங்களின் பெறுமதியினை நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(எ) கடந்த ஆண்டுகள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 273,890 தொகையான நிலுவை கணக்காய்வுக் கட்டணத்திற்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு செய்திருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களிலுள்ள 10 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் உரிய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே அவதானிக்கப்பட்ட ஒப்பற்ற தன்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 5,623,314 தொகையாக இருந்தது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் பல வருட காலமாக முன்கொண்டு வந்து காணப்படும் தொங்கல் கணக்கில் காணப்பட்ட ரூபா 2,382,841 இற்கான செலவு மீதியை இனங்கண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொண்டு கணக்குகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 84,238,318 தொகைக்கான பலவின கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 60,412,156 இற்கான மீதிகள் உள்ளடங்கியிருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 69,364,618 தொகைக்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நாளது வரையாக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடப் பதிவேடு, உருத்துறுதி மற்றும் அட்டவணைகள், கூட்டுத்தொகை ரூபா 11,378,932 தொகைக்கான பலவின கடன்கொடுத்தோர் மீதி மற்றும் ரூபா 86,621,962 தொகைக்கான கடன்பட்டோர் மீதி தொடர்பாக முறைசார் மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட அட்டவணைகள், காலப்பகுப்பாய்வுகள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 95,669 தொகைக்கான முற்பணங்கள் தொடர்பான முற்பணப் பதிவேடு ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால், கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 571 இன் பிரகாரம் 05 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 185,605 தொகைக்கான செலுத்த வேண்டிய தடுத்து வைத்தல் வைப்புக்கள் மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்துள்ள வருமானம் ரூபா 5,029,840 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்துள்ள வருமானம் ரூபா 13,499,054 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 8,469,214 இற்கான வீழ்ச்சி ஒன்றினைக் காட்டியது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் வருமானத்தின் 86.8 சதவீதம் அளவில் மொத்த மீண்டுவரும் செலவுகள் காணப்பட்டன.

(ஆ) சபையினால் சுயமாக உருவாக்கி வருமானத்தை மிகைத்து மூன்று வருடங்களிலும் கணிசமான பெறுமதிகளில் மீண்டுவரும் செலவுக் அதிகரித்திருந்ததுடன் சபையினால் சுயமாக உருவாக்கிய வருமானத்தில் இருந்து மீண்டுவரும் செலவுகளை மேவகை செய்வதற்காக இயலாத ஒரு நிலைமை ஒன்றினைக் காட்டியது.

**2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள அறவிடப்படாமல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 60,412,156 தொகைக்கான மீதிகள் காணப்படுவதால் நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரங்களின் பிரகாரம் திரவத்தன்மை நிலைமையொன்று காணப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**2.4 வருமான நிருவாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**2.4.1 வீதவரி**

2013 ஆண்டு ஆகஸ்ட் 13 ஆம் திகதிய 1824 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசம் முன்னேற்றப்பட்ட பிரதேசம் ஒன்றென வெளியிடப்பட்டிருந்த போதிலும், அந்த நாள் முதல் மீளாய்வாண்டு இறுதி வரையும் சபையினால் வீத வரி அறவீடு செய்யும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.2 வாடகை**

ஆரம்ப நிலுவை வாடகை ரூபா 221,264 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 914,700 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,135,964 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 913,575 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 222,389 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.4.3 நீர்க் கட்டண வருமானம்**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 143,620 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 249,089 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 392,709 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 225,043 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 167,666 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.4.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 222,334 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 10,557,575 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) சபைக்குச் சொந்தமான ரூபா 5,850,000 தொகைக்கான காணிகளின் உரிமையை உறுதிப்படும் விதமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் சபையினால் கொள்வனவு செய்திருந்த கருவா பயிர்ச் செய்கையுடனான 01 ஏக்கர் காணியின் ஒரு பகுதியில் அங்கீகாரம் இன்றி வசித்து வந்த ஒரு நபர் 2 வீடுகள் நிர்மாணித்து ஆதனத்தையும் அனுபவித்து வந்த போதிலும் இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) மூன்றாம் தரம், இரண்டாம் தரம், ஆரம்ப தரம் ஆகிய பதவிகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த 17 தொகையான மேலதிக பதவியணியினரை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், நிரந்தரப்படுத்தப்படாத பதவியணியினர் சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,874,923 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

ஒரு வருட காலத்தை விட மிகையான காலமாக சேதனப் பசளை அரிக்கும் இயந்திரமொன்று மற்றும் 30x14x12 அடி அளவையுடைய பச்சையில்லமும், ஒரு வருடத்தை விட கூடிய காலம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் சபைக்குச் சொந்தமான யடியன கிணறு அமைந்துள்ள காணியும், எதுவித பயனுள்ள கருமம் ஒன்றிற்கு ஈடுபடுத்தப்பட்டிருக்காததுடன் ரூபா 100,000 கிரயத்தையுடைய கை டிரக்டர் வண்டியொன்றும் செயற்படாது காணப்பட்டது.

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

மீளாய்வாண்டின் போது புதிய கட்டிட பூந்தோட்டம் மற்றும் புதிய தகனசாலை பூந்தோட்டத்தை அலங்கரிப்பதற்காக ரூபா 1,084,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. குறிப்பிட்ட 02 நிர்மாண வேலைகள் தொடர்பாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 129,496 தொகையொன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 சுற்றாடல் சார் சிக்கல்கள்

திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 6,333,600 இற்கான செலவு செய்யப்பட்டிருந்ததுடன், சபையினால் அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள், சேதனப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்திய பின்னர் மீதியாகவுள்ள கழிவுப்பொருட்களை சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நில்வலா ஆற்றின் அண்மையிலுள்ள தனியாருக்கு சொந்தமான சதுப்பு நிலத்தில் போடப்பட்டுள்ளமையால் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்ற, நீர் தாவரங்கள் மற்றும் மிருகங்களுடனான சுற்றவுள்ள சுற்றாடலுக்கு சேதங்கள் ஏற்பட்டு இருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டிலுள்ள 05 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்காகிய வருமானம் ரூபா 31,210,906 தொகையும், 07 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 30,830,124 தொகைக்கான சேமிப்புக்களும் காணப்பட்டமை

காரணத்தினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை அரச நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய த.ப.பா/யஹ/01/ந.ச.லே இலக்கங் கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 456,830 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) வருமானம் சேகரித்தல்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு